

நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திருச்சிராப்பள்ளி ரயில்வே ஜங்சன் பழைய மேம்பாலத்தை அகற்றி புது மேம்பாலம் கட்டும் பணிகள் நடைபெறவுள்ளதை தொடர்ந்து போக்குவரத்து மாற்றம் செய்வது தொடர்பாக நேற்று(21.09.2024)கள ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். அருகில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மாநகர காவல் ஆணையர் திருமதி.காமினி, மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் வே.சரவணன்,மாநகர காவல் துணை ஆணையர் செல்வக்குமார், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் (க&ப) செந்தில், கோட்டப்பொறியாளர்கள் கண்ணன் (க&ப),முருகானந்தம் (திட்டங்கள்), உதவிக் கோட்டப் பொறியாளர்கள் திருமதி.மீனாட்சி,புகழேந்தி, திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் அருள், நகரப்பொறியாளர் சிவபாதம், அரசுத்துறை உயர் அலுவலர்கள், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு தெற்கு மாவட்ட கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் ஈரோடு, தங்கம் மஹாலில் மாவட்ட அவைத்தலைவர் குமார் கே.முருகேஸ் தலைமையில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி கலந்து கொண்டு நடைபெற இருக்கிற சட்டமன்றத் தேர்தலில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் தேர்தல் களப்பணிகள் ஆற்றுவது குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி , பேரூர், வார்டு , கிளை கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர். மேலும் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தமிழ்நாட்டில் – 28வது ஆண்டு

# அகில இந்திய வனத்துறை விளையாட்டுப் போட்டிகள் நடத்த நடவடிக்கை!

## வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தகவல்!



சென்னை, செப். 22 -

கோவையில் 27வது மாநில வனத்துறைப் போட்டிகள் தொடக்க விழாவில் வனத்துறைப் போட்டிகளை தொடங்கி வைத்து அமைச்சர் டாக்டர். மா.மதிவேந்தன் பேசியதாவது,

விளையாட்டுப் போட்டிகள் என்பது மிக முக்கியமான நிகழ்வாகும். விளையாட்டுத் துறை அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு நம்மாநிலத்தில் விளையாட்டுத் துறைக்கு அதிக அளவில் முக்கியத்துவம் வழங்கி, சர்வதேச அளவிலான விளையாட்டு போட்டிகளை நம் மாநிலத்தில் நடத்தி பெருமை சேர்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அந்தவகையில் தமிழ்நாடு விளையாட்டுத் துறையில் மிகப்பெரிய அளவில் மாற்றங்களை உருவாக்கும்வகையில், சென்னையில் சர்வதேச அளவிலான செஸ் போட்டிகள் நடத்தப்பட்டும், அகில இந்தியஅளவிலான கேலோ இந்தியா இளையோர்களுக்கான போட்டிகளும், பார்முலா 4 கார்பந்தய போட்டி, உலக நீர்ச்சறுக்கு விளையாட்டுப் போட்டிகள் போன்ற விளையாட்டுப் போட்டிகள் உலகதரத்தில் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

தற்போது விளையாட்டுத் துறையை சேர்ந்த வீரர் வீராங்கனைகள் அதிகஅளவில் ஊக்குவிக்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக பாரீஸில் நடைபெற்ற பாராஒலிம்பிக் விளையாட்டு போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்தமாரியப்பன் பதக்கம் வென்று தமிழ்நாட்டிற்கு சிறப்பு சேர்த்துள்ளார். களப்பணியாளர், அமைச்சு பணியாளர்கள், அலுவலர்களையும் உள்ளடக்கிய பெரிய துறையின் உடல்தகுதியும், ஆரோக்கியத்துடனும் இருப்பது மட்டுமே வனத்தையும், வன உயிரின பாதுகாப்பு , வன மேம்பாட்டையும் உறுதி செய்ய இயலும்.

**விளையாட்டுத் திருவிழா!**

அகில இந்தியஅளவில் வேறு எந்தத்துறையிலும் இல்லாத வகையில், அனைத்து விதமான விளையாட்டுகளையும் உள்ளடக்கிய மிகப்பெரிய விளையாட்டு திருவிழாவாக வனத்துறை விளையாட்டு போட்டிகள் நடைபெறுவதை அறிந்து பெருமிதம் அடைகிறேன். அகில இந்திய வனத்துறை விளையாட்டு போட்டிகளுக்காக தேர்வு செய்யும் விதமாகவும், மண்டலங்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டிகளை உருவாக்கும் விதமாகவும், கோயம்புத்தூரில் ஒவ்வொரு முறையும் மாநில அளவிலான வனத்துறை விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் நடைபெற்றுவரும் அகில இந்திய வனத்துறை விளையாட்டுப்போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு மாநிலங்களில் நடைபெற்று வருகின்றது. 2000ஆம் ஆண்டு 8வது அகில இந்திய வனத்துறை போட்டிகள் சென்னையில் மிகச்சிறப்பாக நடத்தப்பட்டுள்ளது.

அகில இந்திய வனத்துறை போட்டிகளில் கலந்துகொண்டு பதக்கங்கள் பெறும் நமது துறை சார்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெறும் இந்த சீரிய ஆட்சியில் ஊக்கத் தொகை வழங்கி கௌரவிக்கப்படுகிறது. அகில இந்திய அளவில் வெற்றி பெறுகின்ற வனத்துறை விளையாட்டு வீரர்களுக்கு தற்போது தங்கம் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.20,000ம், வெள்ளி பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.15000, வெண்கலப் பதக்கம் வெல்பவர்களுக்கு ரூ.10,000ம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது. இந்த ஊக்கத்தொகையினை உயர்த்தி வழங்க கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன. இதுகுறித்து முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, ஊக்கத்தொகை உயர்த்திவழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடந்த ஆண்டு ஹரியானா மாநிலத்தில் நடைபெற்ற 26வது அகில இந்திய வனத்துறை போட்டிகளில் தமிழ்நாடு வனத்துறை அணி 18 தங்கம், 16 வெள்ளி, 17 வெண்கலப் பதக்கங்களை வென்று 5வது இடத்தை பிடிக்க உறுதுணையாக இருந்த அனைத்து வீரர் மற்றும் வீராங்கனைகளையும் நான் மனதார பாராட்டுகிறேன்.

அனைத்து துறைகளிலும் முன்னோடியாக விளங்கும், தமிழ்நாட்டிற்கு மேலும் பெருமை சேர்க்கும் விதமாகவும், நமது மாநிலத்தில் சிறப்புகளையும், திறமைகளையும் வெளிப்படுத்தும் விதமாகவும், முதலமைச்சர் அவர்களின் சீரிய ஆலோசனையின்படியும், விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் உறுதுணையுடன், 28வது ஆண்டு அகில இந்திய வனத்துறை விளையாட்டு போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்த நடவடிக்கை கள் மேற்கொள்ளப்படும்.

**ஜப்பான் நிதியுதவி!**

தமிழ்நாடு வனத்துறையையும், வனங்களை மேம்படுத்தவும் அரசு மேற்கொண்ட சீரிய முயற்சியினால் 2022 முதல் 2030 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு உயிர்பன்மை பாதுகாப்பு மற்றும் பசுமையாக்கல் திட்டம் காலநிலை மாற்றத்தினை எதிர்கொள்ளும்வகையில் ரூ.920.52 கோடி செலவில் ஜப்பான் நாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தில் மனித விலங்குகள் மோதல்களை தடுக்கும் பொருட்டு, அகழிகள் அமைக்கும் பணிகள், செயற்கை, நுண்ணறிவு தடுப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு கோவை பாலக்காடு மின்சார ரயில் இருப்பு பாதையில் பல ஆண்டுகளாக ஏற்பட்டு வந்த யானை உயிரிழப்புகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

தற்போது நடைபெறும் மாநில அளவிலான போட்டிகளில் தங்கள் முழுத்திறமையினை வெளிபடுத்தி தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்கவும், விளையாட்டு உணர்வுடன் நீங்கள் அனைவரும் உழைக்கவேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன். இந்த விளையாட்டு போட்டிகளில் கலந்துகொண்டிருக்கின்ற, 12 மண்டலங்களைச் சேர்ந்த அனைத்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளையும் வாழ்த்தி, நீங்கள் “True Spirit of Sportsmanship” என்ற அடிப்படை தாரக மந்திரத்தினை மறவாமல் முழு ஆர்வத்துடன், திறமையினை வெளிபடுத்தி வெற்றிபெற கேட்டுக்கொள்கிறேன்.

இந்த ஆண்டு அக்டோபர் மாதம் 16 முதல் 20 வரை சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் நடைபெறவுள்ள 27 அகில இந்திய வனத்துறை போட்டிகளில் கலந்துகொள்ளும் அனைத்து வீரர்கள் மற்றும் வீராங்கனைகளும் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமைசேர்க்கும் வகையில் விளையாட மனதார வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.




தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரையாற்றினார். அருகில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், அரசு தலைமைக் கொறடா முனைவர் கோவி.செழியன், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி உள்ளிட்ட நகரக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள், மண்டலக்குழு தலைவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நீலகிரி மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் - வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு குறித்த

# மாவட்ட அளவிலான முகாம் - 4 விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள்!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் பார்வையிட்டு வழங்கினார்!

நீலகிரி, செப்.22-

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், வேளாண் பொறியியல்துறையின் சார்பில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் பயன்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில் அவற்றை சரிவர பராமரிப்பது தொடர்பான மாவட்ட அளவிலான முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் நேற்று (20.09.2024) தொடங்கி வைத்து, பார்வையிட்டு, 2 விவசாயிகளுக்கு பவர் டில்லர் மற்றும் 2 விவசாயிகளுக்கு டிராக்டர் என மொத்தம் 4 விவசாயிகளுக்கு ரூ.22 இலட்சத்தில் ரூ.14 இலட்சம் மானியத்தில் வேளாண் இயந்திரங்களை வழங்கினார்.

இம்முகாமில், பல்வேறு வகையான டிராக்டர்கள், பவர் டில்லர்கள், பவர் வீடர்கள், தேயிலை அறுவடை இயந்திரங்கள் போன்ற வேளாண் இயந்திரங்கள், மின் மோட்டார்கள், புல் வெட்டும் கருவிகள், சுழல் கலப்பைகள், மருந்து தெளிப்பான்கள் மற்றும் இதர கருவிகள் பராமரிக்கும் முறை குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு பொறுப்பேற்றது முதல் விவசாயிகளின் முன்னேற்றம் குறித்த பல்வேறு திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. மேலும், ஆட்கள் பற்றாக்குறை காரணமாக பல்வேறு இயந்திரங்கள் விவசாய பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த இயந்திரங்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் அரசால் வழங்கப்பட்டு, அவர்களின் பொருளாதாரம் மற்றும் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் இயந்திரங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தும்போது ஏதேனும் இயந்திரக் கோளாறு, சிறு பழுதுகள் ஏற்பட்டால் அதனை விவசாயிகளே சரிசெய்து கொள்ளும் வகையில் இன்று ஒருநாள் வேளாண் பொறியியல் துறை சார்பில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு தொடர்பாக மாவட்ட அளவிலான முகாம் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இன்று நடைபெற்று வரும் முகாமின் மூலம் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் இயக்கம் மற்றும் பராமரிப்பு முறைகளை விவசாயிகள் அறிந்து கொள்ள முடியும். தனியார் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தயாரிக்கும் நிறுவனங்களின் பொறியாளர்களுடனும் அலுவலர்களுடனும் விவசாயிகள் நேரில் கலந்துரையாடி விளக்கம் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலும், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல், செய்யக் கூடியது மற்றும் செய்யக்கூடாதது, பழுதுகளைக் கண்டறிதல் உதிரிபாகங்கள் குறித்த தெளிவுரை, மசகு எண்ணெய் மற்றும் உழவுப் பொருட்கள் பயன்பாடு பற்றி அறிந்து கொள்ளலாம்.

மேலும், விவசாயிகள் தங்களது சொந்த டிராக்டர்கள் மற்றும் உபகரணங்களை இம்முகாமிற்கு கொண்டு வந்து இலவசமாக பராமரிப்பு செய்து கொள்ளலாம். வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகளின் திறன்மிகு இயக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த விழிப்புணர்வும் இம்முகாமில் ஏற்படுத்தப்படுகிறது. இம்முகாம்களில் கலந்து கொள்ளும் ஆர்வமுள்ள இளைஞர்களை இத்துறையால் நடத்தப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியில் சேர்ந்து பயன்பெற ஊக்குவிக்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில், 2021-2022 நிதியாண்டில் ரூ.7.08 இலட்சம் மதிப்பீட்டில் 18 இயந்திரங்களும், 2022-2023 நிதியாண்டில் ரூ.40.91 இலட்சம் மதிப்பீட்டில் 58 இயந்திரங்களும், 2023-2024 நிதியாண்டில் ரூ.1.49 கோடி மதிப்பீட்டில் 107 இயந்திரங்களும் என மொத்தம் 183 பயனாளிகளுக்கு ரூ.1.97 கோடி மதிப்பீட்டில் மானிய விலையில் விவசாயிகளுக்கு பல்வேறு வேளாண் இயந்திரங்கள் மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்று வரும் இந்த வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பராமரிப்பு குறித்த மாவட்ட அளவிலான முகாமினை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில் விவசாயிகளால் கொண்டு வரப்பட்ட வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் செய்து தரப்பட்டது. கேத்தி சி.எஸ்.ஐ பொறியியல் கல்லூரியில் பயிலும் 45 மாணவர்கள் இம்முகாமில் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இந்நிகழ்வில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக், உதகை ஊராட்சி ஒன்றியத்தலைவர் மாயன் (எ) மாதன், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் ராதாகிருஷ்ணன், உதவி செயற்பொறியாளர்கள் சுந்தராஜன் (உதகை), செந்தில் குமார் (குன்னூர்), உதவி பொறியாளர் (உதகை) ரகு பிரகாஷ், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### இனமானப் பேராசிரியரின் அன்புச் சகோதரி

# திருமதி இராஜம் இராமதாஸ் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, செப். 22 -

இனமானப் பேராசிரியர் அவர்களின் அன்புச் சகோதரி இராஜம் இராமதாஸ் மறைவுக்கு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:

**நம் நெஞ்சங்களில் நிறைந்து வாழும் இனமானப் பேராசிரியர் அவர்களின் அன்புச் சகோதரி திருமதி. இராஜம் இராமதாஸ் அவர்கள் இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.**

**அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது பிரிவால் வாடும் அவரது மகன் மருத்துவர் குணாளன் உள்ளிட்ட அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.



மயிலாடுதுறை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் மயிலாடுதுறையில் நடைபெற்றது. கூட்டத்தில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர் ஜெ.ரேகாபிரியதர்ஷினி , மாநில பிரச்சார குழு செயலாளர் ராணிரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.